பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 95

22.09.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் கிராம நிர்வாக அதிகாரிக்கு 2 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

2012-ம் ஆண்டு புகார்தாரர் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக பிசிந்தி கிராம நிர்வாக அலுவலகம், விருதுநகர் மாவட்டத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரீசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ.1,500/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என திரு.ஆதிமூலம், கிராம நிர்வாக அதிகாரி, பிசிந்தி கிராமம், காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம் அவர்கள் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, விருதுநகர் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2012ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.ஆதிமூலம், கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் லஞ்சபணம் ரூ.1,500/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு இன்று 22.09.2026ந் - தேதி திரு.ஆதிமூலம், கிராம நிர்வாக அதிகாரி அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 95
22.09.2026

VILLAGE ADMINISTRATIVE OFFICER WAS CONVICTED IN BRIBE CASE

During 2012, the complainant had applied for patta name transfer at Pisindi Village Administrative Office, Viruthunagar district. Tr.Aathimoolam, Village Administrative Officer, Pisindi Village, Viruthunagar District demanded Rs.1,500/- as bribe from the complainant for processing his application. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Viruthunagar Detachment. In this connection a trap was organized. During the trap proceedings, Tr.Aathimoolam, Village Administrative Officer received the bribe amount of Rs.1,500/- from the complainant. The accused was arrested and remanded. On completion of investigation, the case was charge sheeted against the accused. Today 22.09.2026 the Principal District Court Judge, Srivilliputhur, Viruthunagar pronounced the judgment against Tr.Aathimoolam, Village Administrative Officer and sentenced him to undergo Rigorous Imprisonment for 2 years and fine of Rs.10,000/-.